# திருக்குறளோடு திருச்சிலுவைப் பாதை

அருள்பணி பெனடிக்ட் ஆனகின்
பொதுச்செயலர், தமிழக மறைக்கல்விப் பணிக்குழு.

## தொடக்கவுரை :

இலக்கியங்கள் ஒவ்வொன்றும் நம் அன்றாட வாழ்வின் பிரதிபலிப்புகள். அவை மொழிகளையும் அந்த மொழிகள் காட்டும் நல்வழிகளையும் நாம் எளிதாகப் புறந்தள்ள இயலாது. எனவே, மனித இனத்திற்கென தமிழ்க் குலத்திலிருந்து முகிழ்ந்த திருக்குறளின் அறச் சிந்தனைகளோடு, அன்புக்காகத் தம்மை அர்ப்பணம் செய்த இயேசுவின் பாடுகளை ஆழ்ந்து உணர மேற்கொள்ளும் எளிய முயற்சிதான் இந்தத் திருக்குறளோடு திருச்சிலுவைப் பாதை.

தமிழ் பெற்றத் தவவரம் தான் திருவள்ளுவர் வனைந்த திருக்குறள். அவர் எங்கே, எப்போது பிறந்தார் என்பன போன்ற ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்றாலும் அவரது அரும்படைப்பாம் திருக்குறள் ஒட்டுமொத்த உலகினுக்கு அறவொளி காட்டும் ஆதவனாக, பொதுமறையாக ஒளிர்ந்து நிற்கின்றது. அந்தப் பார்வையில், மானிட விடுதலையை மனம் சுமந்து அக உணர்வோடு பணியாற்றியவர் இயேசு. அவரது போதனைகளும் பணி முதன்மைகளும் பாடுகளும் வள்ளுவத்துள் இழையோடி கிறித்துவத்துள் ஊடுருவியுள்ளதை யாராலும் மறுக்க முடியாது.

இங்கே, இயேசுவின் கல்வாரிப் பாடுகள் சுட்டும் பதினான்கு நிலைகளைப் படம்பிடித்துக்காட்டும் பதினான்கு திருக்குறள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, திருச்சிலுவைப் பாதையாக வடிவமைக்கப் பட்டுள்ளன. வள்ளுவர் வகுத்த குறள்நெறிகளின் வழியாக இயேசுவின் பாடுகளை ஆழ்ந்து தியானிப்போம். தமிழ் உணர்வோடு, இயேசுவின் தற்கையளிப்புத் திருநிகழ்வை நம் இதயத்துள் விதைப்போம். அந்த விதைகளில் விளைந்த கனிகளாக நமது வாழ்வை உருமாற்றுவோம்.

## வழிநடத்தும் முறை :

* சிலுவைப் பாதையின் ஒவ்வொரு நிலைக்கு முன்பாகக் குறிப்பிடப் பட்டுள்ள திருக்குறளையும் அதன் எண்ணையும், எழுதி வைக்கலாம்.
* ஒவ்வொரு நிலையிலும் தொடக்க வேண்டல், திருக்குறள், சிறுவிளக்கம், சிந்திக்க, அமைதியில் ஆழ்தல், இறைவேண்டல் என்று தொடரலாம்.
* சிலுவைப் பாதையின் பதினான்கு நிலைகளோடு இங்கே தேர்ந்தெடுக்கப் பட்டப் பதினான்கு திருக்குறள்களையும் மனனம் செய்யலாம்.

**1. தீர்ப்பு வழங்கப்படல்**

**குறள் 541** **ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்துசெய் வஃதே முறை.**

**சிறுவிளக்கம் :** ஒருவர்மீது சுமத்தப்பட்டக் குற்றத்தை விருப்பு வெறுப்பு இன்றி நடுநிலையோடு அணுகிச் செயற்படுவதே நீதிக்குச் செய்யும் நீதி.

**சிந்திக்க :** நம் மத்தியில் உண்மையோடும் நடுநிலையோடுந்தான் தீர்ப்புகள் உலா வருகின்றனவா? இல்லையெனில் ஏன்?

அமைதியில் ஆழ்தல்

**இறைவேண்டல் :** காழ்ப்புணர்வோடு கைது செய்யப்பட்டு, தீர்ப்பிடப்பட்ட இயேசுவே! ஆள் பார்த்து அல்லாது, எப்போதும் நேர்மையாய் நீதியுடன் வாழ வரம் தாரும்.

**2 சிலுவை சுமத்தல்**

**குறள் 220** **ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்**
**விற்றுக்கோள் தக்க துடைத்து.**

**சிறுவிளக்கம் :** சமூக ஒன்றிப்புப் பணியில் தமக்குப் பெருங்கேடு வரினும், தம்மை விற்றேனும் பிறர் சுமை தாங்கத் துணிவது பெருமதிப்புக்குரியது.

**சிந்திக்க :** பிறருக்கானப் பணிகளைத்தொடரும்போது நமது மனநிலைகள் என்ன?

அமைதியில் ஆழ்தல்

**இறைவேண்டல் :** சமத்துவ சமூக உருவாக்கத்திற்காகப் பெருஞ்சுமையான சிலுவை ஏற்ற இயேசுவே! சமூகநலப் பொதுப்பணிகளை சுமையாகக் கருதாமல் செயலாற்றும் வரம் தாரும்.

**3. முதன்முறை வீழ்தல்**

**குறள் 267** **சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்**
**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.**

**சிறுவிளக்கம் :** பொன்னை எவ்வளவுதான் சுட்டாலும் அது ஒளிரும். அவ்வாறே இலட்சியத்தை இதயம் சுமந்து பயணிப்போரின் வாழ்வில் எவ்வளவுதான் தடைகள் போட்டாலும் அவர்கள் உறுதியோடு எழுந்து நடப்பர்.

**சிந்திக்க :** வாழ்வில் வரும் தடைகளைக் கண்டு தடுமாறியிருக்கின்றோமா? அவற்லைப் படிகளாம் ஆக்கியிருக்கின்றோமா?

அமைதியில் ஆழ்தல்

**இறைவேண்டல் :** எம்மை எழச் செய்ய பாரச் சிலுவையோடு விழுந்த இயேசுவே! நீர் விழ்ந்தாலும் எழுந்து நடந்ததைப்போல, தடைகளில் தடம் பிறழாமல் பயணிக்க வரம் தாரும்.

**4. தாயைச் சந்தித்தல்**

**குறள் 656 :** **ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க**

**சான்றோர் பழிக்கும் வினை.**

**சிறுவிளக்கம் :** தன் தாய் பசியால் துடிக்கிறார் என்பதற்காகக் கூட, இலட்சியவாதிகள், பிறர் பழிக்கும் இழிவான செயல்களில் ஈடுபடக் கூடாது.

**சிந்திக்க :** நம் வாழ்வில் குடும்ப உறவுகளுக்காய் பொதுநலப் பணிகளிலிருந்து விலகிய தருணங்கள் எவை? ஏன்?

அமைதியில் ஆழ்தல்

**இறைவேண்டல் :** கல்வாரி நோக்கிய பயணத்தில் தாயாம் மரியாவைச் சந்தித்த இயேசுவே உம் தாயின் முகம் கண்டு, துணிவு கொண்டு பயணித்த வீரமனத்தை எமக்கும் தாரும்.

### 5. சீமோன் உதவுதல்

**குறள் 102 : காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது.**

**சிறுவிளக்கம் :** ஒருவரது பெருந்துயர நேரத்தில் இன்னொருவர் செய்யும் உதவி மிகச் சிறியதாயினும், அது இந்த உலகை விடவும் பெரியது.

**சிந்திக்க :** அடுத்தவரின் துயரச் சுமைகள் கண்டும் நாம் ன் பாராமுமாய் இருந்தோம்?

அமைதியில் ஆழ்தல்

**இறைவேண்டல் :** ஒட்டுபொத்த உலகையும் சிலுவை வடிவில் சுமந்த இயேசுவே! பிறர் துன்பங்கண்டு ஒதுங்காமல் உடனிருந்து உதவும் உயர்மனம் தாரும்.

### 6. வெரோணிக்கா முகம் துடைத்தல்

**குறள் 93** : **முகத்தான் அமர்ந்தினீது நோக்கி, அகத்தானாம்**
**இன்சொ லினதே அறம்.**

**சிறுவிளக்கம் :** ஒருவரின் முகத்தோடு முகம் நோக்கி, அகத்திலிருந்து அமுதமாக வார்த்தைகளை இனிதாய்ப் பகிர்வதும் அறமாகும்.

**சிந்திக்க :** அநீதிகளின்கபோது தனி ஆளாக நின்று செயல்பட வேண்டுமா?. எனக் கேட்டு ஒருங்கிய காரணங்கள் எனை?

அமைதியில் ஆழ்தல்

**இறைவேண்டல் :** கல்வாரிப் பயணத்தில் முகம் துடைத்த வெரோணிக்காவின் வீரச் செயலை ஏற்ற இயேசுவே! ஊரும் உறவும் பழித்தாலும், பகைத்தாலும் உதவுவார் எவருமில்லாதவருக்கு உதவும் கை நீட்டும் உள்ளம் தாரும்.

### 7. இரண்டாம் முறை வீழ்தல்

**குறள் 616 முயற்சித் திருவினை ஆக்கும்; முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**

**சிறுவிளக்கம் :** ஒருவரின் விடாமுயற்சி மதிப்பையும் வெற்றியையும் பெற்றுத் தரும்; முயற்சி இன்மை அவரை வீழ்த்தி விடும்.

**சிந்திக்க** : பொதுநலப் பயணத்தில் நடைகள் எழுந்தபோது நாம் மேற்கொண்ட முயற்சிகள் யாவை?

அமைதியில் ஆழ்தல்

**இறைவேண்டல்:** உம்மைப் பலியாக்கும் நோக்கில் பயணித்தபோது விழுந்தாலும் எழுந்த இயேசுவே! வாழ்வில் வீழ்ந்தாலும் விடாமுயற்சியுடன் உழைக்கும் உறுதி தாரும்.

## 8. எருசலேம் மகளிருக்கு ஆறுதல் அளித்தல்

**குறள் 71** **அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்.**

**சிறுவிளக்கம் :** அன்பிற்குத் தாழ்ப்பாள் என ஏதும் உண்டோ? அன்பு கொண்டு வாழ்கிறவர் துன்புறுவதைக் காண்கையில் வெளிப்படும் கண்ணீரே அன்பைப் பறைசாற்றிவிடும்.

**சிந்திக்க** : நீதி சார்பான மனிதர்களுக்கு, இயக்கங்களுக்கு நமது பதிலும் ஒத்துழைப்பும் எப்படி உள்ளன?

அமைதியில் ஆழ்தல்

**இறைவேண்டல் :** நன்மை செய்தும் குற்றவாளியாக இழுத்துச் செல்லப்பட்ட இயேசுவே! எருசலேம் மகளிரின் அன்புதான் கண்ணீரானது. பிறர் துயரம் கண்டு பரிவோடு உதவும் நன்மனத்தையும் தன் துன்பத்திலும் பிறருக்கு ஆறுதல் வழங்கும் நற்பண்பையும் தாரும்.

## 9. மூன்றாம் முறை வீழ்தல்

**குறள் 630** **இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்**
**ஒன்னார் விழையுஞ் சிறப்பு.**

**சிறுவிளக்கம் :** பிறருக்கு வாழ்வளிக்கும் நிலைப்பாட்டுடன் உழைப்பவரின் பாதையில் எழும் பெருந்தடைகளைக் கண்டு வீழ்ந்து கிடக்காமல் மனஉறுதி கொண்டு எழுபவரை பகைவரும் பாராட்டுவர்.

**சிந்திக்க** : நல்ல நிலைப்பாடுகளுடன் வாழ்ந்தபோதும் திட்டமிட்டு வீழ்த்தப்பட்டடோம் என்றால் அடுத்த நம் செயல்பாடு எதுவோ?

அமைதியில் ஆழ்தல்

**இறைவேண்டல் :** வாழ்வில் இறுதிவரை உறுதிப்பாட்டுடன் கல்வாரி சென்ற இயேசுவே! உடல் சோர்ந்தாலும் உள்ள வலிமையுடன் நீர் எழுந்து நடந்ததுபோல வாழ்வைத் தொடர ஆற்றல் தாரும்.

## 10. ஆடைகள் களையப்படல்

**குறள் 788 :** **உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**

**சிறுவிளக்கம் :** உடுத்தியிருக்கும் உடை நழுவிய உடனே உதவும் கைபோல, உடன்வாழ்பவரின் துன்பம் உணர்ந்து உடனே உதவுதலே உண்மையான நட்பு.

**சிந்திக்க :** நம்மால் உதவி பெற்றவர்களே நம்மை அவனமானப்படுத்தி குற்றவாளியாக்குகையில் எழும் உணர்வுகள் எனை?

அமைதியில் ஆழ்தல்

**இறைவேண்டல் :** எல்லாம் வல்ல கடவுளிடமிருந்து வந்தும் எல்லாம் இழந்து நின்ற இயேசுவே! நேரிய வாழ்வில் எவர் எதிர்த்தாலும் நம்பிக்கையை ஆடையாக்கி வாழ வரம் தாரும்.

## 11. சிலுவையில் அறையப்படல்

**குறள் 669** **துன்பம் உறவரினும் செய்க, துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை.**

**சிறுவிளக்கம் :** நன்மை செய்து வாழ்கையில் பெருந்துன்பம் வந்து வீழ்த்தினாலும் துணிவோடு அதை எதிர்கொள்தலே இலட்சியவாதியின் வெற்றி.

**சிந்திக்க :** நாம் வாழும் சமூகத்தை, என்னென்ன ஆணிகளால் சிலுவையில் அறைந்தோம்?

அமைதியில் ஆழ்தல்

**இறைவேண்டல் :** சிலுவைக் கொலையை மனமுவந்து ஏற்ற இயேசுவே! எம் பாவங்கள் எனும் ஆணிகளால்தான் உம்மை அறைந்தோம். இதை உணர்ந்து எவருக்கும் துன்பம் தராத நன்மனம் தாரும்.

## 12. உயிர் துறத்தல்

**குறள் 967** **ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே**
**கெட்டான் எனப்படுதல் நன்று.**

**சிறுவிளக்கம் :** தீங்கு செய்வோரின் பின்சென்று உயிர் வாழ்வதைவிட நல்ல மன நிலையோடு சாவது எவ்வளவு மேலானது.

**சிந்திக்க :** நமது வாழ்வும் இறப்பும் யாருக்காக, எதற்காக என எண்ணிப்பார்போமா?

அமைதியில் ஆழ்தல்

**இறைவேண்டல் :** சாவை வெற்றி வரலாறாக்கிய இயேசுவே! சாக நேரிட்டாலும், தீமை செய்யாமல் நன்மை செய்து வாழ வரம் தாரும்.

## 13. அன்னையின் மடியில்

**குறள் 518** **வினைக்குரிமை நாடிய பின்றை, அவனை**
**அதற்குரிய னாகச் செயல்.**

**சிறுவிளக்கம் :** ஒருவர் ஒரு செயலைச் செய்யத் தகுந்தவரா என ஆராய்ந்த பின்னரே அவரை அச்செயலைச் செய்ய வாய்ப்பளிக்க வேண்டும்.

**சிந்திக்க :** சமூகத்தின் விளிம்பில் தள்ளப்பட்டு வாழப் போராடுபவருடன்

நமது உறவும் தொடர்பும் எவ்வாறு உள்ளன?

அமைதியில் ஆழ்தல்

**இறைவேண்டல் :** பலியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செம்மறியாம் இயேசுவே! மானிடத்தை மீட்கும் பணியை உம் உயிரளிப்பால் நிறைவேற்றினீர். எமக்கும் அந்தத் துணிவான மனம் தாரும்.

## 14.கல்லறையில் அடக்கம்

**குறள் 121** **அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்.**

**சிறுவிளக்கம் :** பணிவு ஒருவர்க்கு அழியாப் புகழ்நிலை தரும்; பணிவின்றி வாழ்வோர் இருளுக்குள் மாய்ந்து விடுவர்.

**சிந்திக்க :** நாம் எவை எவற்றைச் சாகடித்து, எவை எவற்றை உயிர்த்துடிப்போடு செயற்படுத்த வேண்டியுள்ளது?

அமைதியில் ஆழ்தல்

**இறைவேண்டல் :** மாட்டுத்தொழுவத்தில் பிறந்து அயலவர் கல்லறையில் அடக்கப்பட்ட இயேசுவே! உமது பணிவே உம்மிடமிருந்த பேராற்றல். அதனைப் பின்பற்றி வாழும் நல்லுணர்வு தாரும்.

**நிறைவாக**

உணர்வுகளின் வெளிப்பாடுதான் மொழி. அந்த மொழிகளுள் மூப்பும் தனிச்சிறப்பும் பெற்ற தமிழ்மொழி தந்த தகைவிலாக் காவியந்தான் திருக்குறள். திருவள்ளுவர் எழுதித் தந்த ஒவ்வொரு குறளும் மனித வாழ்வியல் நெறிகள் மட்டுமல்ல; அது மானிட சமூகத்தின் குரலுமாகும். குறள் சுட்டும் பொருளைத் தம் குரல் எழுப்பி, சமத்துவச் சமூகம் படைக்க துணிந்தவர்தாம் இயேசு கிறிஸ்து. ஆனால் அவரது குரல் ஒடுக்கப்பட்டு கல்லறைக்குள் அடக்கப்பட்டது. அவ்வாறு அடக்கப்பட்டாலும் அது இன்னும் அபார சக்தியோடு ஆர்ப்பரித்து எழும் நிலை கொண்டது என்பதை அதிகார நிலையினர் அகம் உணர மறந்தனர்.

அன்புக்காகவும் உண்மைக்காகவும் நீதிக்காகவும் சமத்துவத்துக்காகவும் குரல் எழுப்பிய இயேசுவுக்கு விண்ணகத் தந்தை கொடுத்த இழப்பின் வாய்ப்புதான் சிலுவைச் சாவு. இலட்சியவாதியான இயேசு இழப்பின் வழியைத் துணிவோடு ஏற்றார். இயேசுவின் பாடுகளாலும் உயிர்ப்பினாலுமே நாம் மீட்கப்பெற்றோம். அவ்வாறு மீட்கப்பெற்ற நாம் இயேசுவின் அருட்குரலாகவும், திருவள்ளுவரின் திருக்குறளாகவும் வாழ்வதும் செயற்படுவதும் நம் கடமை. இப்பேருண்மையை உள்ளுணர்ந்து இனிவரும் வாழ்வைத் தொடருவோமா.

**நன்றி - வழிகாட்டும் தோழன்**